2012 மே 8]

மின்சாரம் எடுப்பதால் காவிரி நீர்நிலை ஆணையத்தினுடைய அனுமதியைப் பெறவேண்டும் என்று சொல்லி, திட்டங்கள் எல்லாம் தயார் செய்து, ஆய்வுகள் செய்து, அதைச் செயல்படுத்துவதற்குத் தயாரான நிலையில் மத்திய அரசு இதற்கு எதிர்ப்புத் தெரிவித்து அனுமதி அளிக்க மறுத்துவிட்டது. அதேபோன்ற ஒரு சூழ்நிலை இந்தத் திட்டத்திலும் வந்துவிடுமோ என்று நினைக்கத் தோன்றுகிறது. ஏனென்று சொன்னால், இதுவும் மேட்டூரில் உள்ள பகுதியிலே இருந்தாலுங்கூட—மத்திய அரசுதான் இங்கே வில்லன்போல; எப்படியெல்லாம் இதைத் தடுத்து நிறுத்துவது என்ற கண்ணோட்டத்திலே பார்க்கிறது—ஆய்வுகளை மேற்கொண்டு மத்திய அரசின் அனுமதியைப் பெற்று இந்தப் பணிகளை விரைவாக முடிப்பதற்கு மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு நடவடிக்கை மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 226, மாண்புமிகு உறுப்பினர் திரு. கா. ராமச்சந்திரன், மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.*

226—

பேருந்து நிலையம்

***1268—திரு. கா. ராமச்சந்திரன்:**

மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குன்னூர் தொகுதி, குன்னூர் பேருந்து நிலையத்தினை விரிவுபடுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியுடன் திருத்திய விடையை அளிக்கிறேன்.*

(அ) ஆம்.

(ஆ) குன்னூர் தொகுதி, குன்னூர் பேருந்து நிலையத்தை விரிவுபடுத்த தேவைப்படும் மாற்று இடம் இல்லாத காரணத்தால் நகராட்சிக்குச் சொந்தமான பேருந்து நிலைய வளாகத்திற்குள் தற்போது பயன்பாட்டிலுள்ள தீயணைப்புத் துறையின் கட்டமைப்புகளை வேறு இடத்திற்கு மாற்றம் செய்வதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இப்பணிகள் நிறைவேற்றப்பட்டவுடன் பேருந்து நிலையத்தை விரிவுபடுத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-10

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கா. ராமச்சந்திரன் அவர்கள், இருக்கையில் இல்லை.*

வினா வரிசை எண் 227, மாண்புமிகு உறுப்பினர் திரு. என். முருகுமாறன், மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

227—

மகளிர் கலைக் கல்லூரி

***8881—திரு. என். முருகுமாறன்:**

மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காட்டுமன்னார்கோவில் தொகுதி, கூடுவெளியில் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறைக்குச் சொந்தமான இடத்தில் அரசு மகளிர் கலைக் கல்லூரி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. பி. பழனியப்பன், உயர் கல்வித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) காட்டுமன்னார்கோவில் தொகுதி, கூடுவெளியில் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறைக்குச் சொந்தமான இடத்தில் அரசு மகளிர் கலைக் கல்லூரி தொடங்குவது குறித்த கருத்துரு ஏதும் தற்பொழுது அரசின்